# வேதாகமம் ஆண்டவரின் வார்த்தையா?

## அறிமுகம்

வேதாகமம் 66 புத்தகங்களைக் கொண்டுள்ளது. அவற்றை நாற்பதுக்கு மேற்பட்டவர்கள் எழுதியுள்ளனர்.
அதற்கு இரண்டு தலைமையான பிரவுகள் உண்டு:
பழைய ஏற்பாடு ஆண்டவருக்கும் மனிதனுக்கும் இடையிலான பழைய உடன்படிக்கையாகும். அது 39 புத்தகங்களைக் கொண்டுள்ளது.
புதிய ஏற்பாடு ஆண்டவருக்கும் மனிதனுக்கும் இடையிலான புதிய உடன்படிக்கையாகும். அது 27 புத்தகங்களைக் கொண்டுள்ளது.
வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டு பகுதியானது புதிய ஏற்பாட்டு பகுதியின்றி நிறைவுபெறாததாய் விளங்கும். ஏனெனில் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்கள் புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்றன. பழைய ஏற்பாட்டின் முதல் புத்தகமான ஆதியாகமம் மோசே என்பவரால் கி.மு. 1500-ல் எழுதப்பட்டது. [புதிய ஏற்பாட்டின் கடைசி புத்தகமான வெளிப்படுத்தல் யோவான் என்பவரால் கி.பி. 100-ல் எழுதப்பட்டது.
எனவே. முழு வேதாகமத்தைத் தொடக்கத்திலிருந்து முடிவுவரை எழுதுவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காலம் சுமார் 1600 ஆண்டுகளாகும். (எதிரே உள்ள வரைப்படத்தைப் பார்க்கவும்)
வேதாகமம் ஆண்டவர் எப்படி உலகத்தையும் அதில் உள்ள அனைத்தையும் படைத்தார் என்பதைச் சொல்லி தொடங்குகிறது.
படைப்பைப் பற்றிய தலைசிறந்த அறிவைக் கொண்ட ஒருவரின் உதவியின்றி படைப்பைப் பற்றி மோசே இவ்வளவு விரிவாக எழுதுவது என்பது சாத்தியமானதல்ல. ஏனென்றால் ஆண்டவர் உலகத்தைப் படைத்த காலத்தில் அவர் வாழவில்லை.
எனவே, அப்படி அந்தக் விவரங்கள் உண்மையானவையானால், அது இயற்கைக்கு அப்பாற்பட்ட ஏவுதலினாலேயே வந்திருக்கமுடியும்.
வேதாகமம் வெளிப்படுத்தல் புத்தகத்தைக் கொண்டு முடிவு பெறுகிறது. ஆண்டவர் எப்படி உலகத்தை நியாயந்தீர்ப்பார், பாவத்தை அழிப்பார், அவரது நித்தியமான நீதியின் ராஜ்யத்தை அமைப்பார் என்பதை இந்தப் புத்தகம் நமக்குக் கூறுகிறது.
கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றைப் பற்றிய இயற்கைக்கு அப்பாற்பட்ட அறிவைக்கொண்ட ஒருவரின் உதவியின்றி எதிர்காலத்தின் சம்பவங்களைப் பற்றி இவ்வளவு விரிவாக எழுதுவது என்பது யோவானுக்குச் சாத்தியமானதல்ல.
எபிரெயர் 1:1-2 கூறுகிறது, "பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்.‘‘



(ஆண்டவரின் திட்டத்தின் படிப்படியான வளர்ச்சி பெறும் வெளிப்படுத்தல்)

- **அது தனிச்சிறப்பு வாய்ந்த புத்தகம்.**

எனவே, வேதாகமம் ஒரு சாதாரணமான புத்தகமல்ல. அதில் முரண்பாடுகள் இல்லை.

## 1. வேதாகமம் ஆண்டவரின் ஏவப்பட்ட வார்த்தை என்பதை உறுதியாக அறிந்துகொள்வது எப்படி?

இதை தெளிவுபடுத்துவதற்கு ஒரு விளக்கத்தைப் பகிர்ந்துகொள்ள எனக்கு இடங்கொடுங்கள்.
ஒரு நிறுவனத்தின் நிர்வாகி 10 ஆண்டுக் காலக்கட்டத்தில், 40 செயலாளர்கள் எழுத 66 கடிதங்களைப் படித்ததாக வைத்துக்கொள்வோம். நாம் 66 கடிதங்களையும் ஒரே கோப்புக்குள் வைக்கமுடியும் ஏனென்றால் அந்த கடிதங்கள் அனைத்தையும் எழுதியவர் அதைச் சொன்ன நிர்வாகியே ஒழிய அவற்றை எழுதிய செயலாளர்கள; அல்ல.

- அதுபோலவே, 1600 ஆண்டுக் காலக்கட்டத்தில் 40 எழுத்தாளர்கள் எழுதிய 66 புத்தகங்களை வேதாகமம் கொண்டுள்ளது.

அந்த 66 புத்தகங்களை எழுதியவர் ஒருவரே என்பதே இதன் பொருளாகும். தொடக்கதில் இருந்து முடிவுவரை முழு வேதாகமத்தை எழுதுவதற்கு 1600 ஆண்டுகள் ஆனதால், 1600 ஆண்டுகள் வாழ்த்தவர் ஆண்டவர் ஒருவராகவெ இருக்கமுடியும்.
எனவே, ஆண்டவரே வேதாகமத்தின் எழுத்தாளர் என்று நம்மால் முடிவு செய்யமுடிகிறது.

## 2. தனது அதிகாரத்தைப் பற்றி வேதாகமம் என்ன சொல்கிறது?

- 2பேதுரு 1:20-21, "வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்.‘‘
- 2தீமோத்தேயு 3-15-17, "கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, . . உனக்குத் தெரியும். வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.‘‘
- 1 பேதுரு 1:10-11, "உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனைபண்ணினார்கள்; தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக்

காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள்“

- 1 கொரிந்தியர் 2:11-13, "மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன;றி ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்.“

## 3. நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் ஆண்டவர் வாழ்கிறார் என்றும் வேதாகமம் ஆண்டவரின் வார்த்தை என்றும் வெளிப்படுத்துகின்றன.

இயேசுவின் பிறப்பைப் பற்றிய இரண்டு தீர்க்கதரிசனங்களை நாம் உதாரணத்திற்காக ஆராய்வோம்:

| தீர்க்கதரிசனம் | தேதி | | நிறைவேறிய | தேதி |
|---|---|---|---|---|
| கன்னிப் பிறப்பு | கி.மு. 750 | ஏசாயா 7:14 | மத்தேயு 1:18-23 | கி.மு. 1 |
| பிறந்த இடம் | கி.மு. 700 | மீகா 5:2 | மத்தேயு 2:1-6 | கி.மு. 1 |

- இரண்டிலும், அவற்றை எழுதிய தீர்க்கதரிசிகளும் அவர்களோடு; சமகாலத்தில் வாழ்ந்தவர்கள் அனைவரும் 100 ஆண்டுக் காலக்கட்டத்தில் மரித்துவிட்டனர். அதன்பிறகு, தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்ட நாளில் இருந்து அது நிறைவேறிய நாள்வரை, அடுத்த 750 ஆண்டுளில் கோடிக்கணக்கான மக்கள் பிறந்து மரித்தனர். இருப்பினும் நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்னர் அவர்கள் எழுதியது எழுதியபடியே நிறைவேறியது.
- மரித்தவர்களால் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றமுடியாததால், இந்த வார்த்தைகள் அந்தத் தீர்க்கதரிசிகளுடையது அல்ல அவர்களை எழுதும்படி ஏவி அருளிய ஆண்டவருடையது என்ற முடிவுக்கு நாம் வரமுடிகிறது. நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு இந்தத் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றும்படி கிரியை செய்யும் ஆண்டவரின் காணவொண்ணா கரத்தை நம்மால் காணமுடிகிறது. நிறைவேறிய பல்வேறு தீர்க்கதரிசனங்கள் அனைத்தையும் இங்கு எழுதுவதற்கு நமக்கு இடம் போதாது. எனவே, வேதாகமம் ஆண்டவரின் அருளப்பட்ட வார்த்தை என்பதை அது உறுதிசெய்கிறது. மேலும் அது, ஆண்டவர் வாழ்கிறார், அவர் சர்வ வல்லவர், அவர் எங்குமுள்ளவர், அனைத்தும் அறிந்தவர், உண்மையுள்ளவர், நம்பிக்கைக்குரியவர் என்பதையும் உறுதி செய்கிறது.
- சர்வ வல்லவர்: ஆண்டவரால் கூடாதது ஒன்றுமில்லை. கன்னியின் மூலம் பிறப்பது என்பது மனிதரால் கூடாதது ஆனால் ஆண்டவருக்குக் கூடாதது ஒன்றுமில்லை.
- எங்கும் இருப்பவர்: தீர்க்கதரிசனங்களை எழுதும்படி அவருடைய தீர்க்கதரிசிகளை ஏவியபோது அவர் இருந்தார், தீர்;க்கதரிசனம் நிறைவேறிய காலத்தில் அவர் இருந்தார், எதிர்காலத்தில் இன்னும் நிறைவேற வேண்டிய தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றும்படி அவர் இன்றும் உயிரோடிருக்கிறார்.
- அனைத்தையும் அறிந்தவர்: கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றைப் பற்றிய அனைத்தையும் அவர் அறிந்துள்ளார். அதனால்தான் நிறைவேறியதையும் இனி எதிர்காலத்தில் நிறைவேற வேண்டியதையும் அவரால் தீர்க்கதரிசிகள் மூலம் தீர்க்கதரிசனம் உரைக்க அவரால் முடிந்தது. அதனால்தான் அவர் உலகத்தைப் படைத்தபோது மோசே வாழாவிட்டாலும் அவர் உலகத்தை எப்படி படைத்தார் (ஆதியாகமம் புத்தகம்) என்பதை எழுதும்படி மோசேக்கு ஏவி அருளமுடிந்தது. அதே காரணத்துக்காகவே, எதிர்காலத்தில் என்ன நடக்கப்போகிறது (வெளிப்படுத்துல் புத்தகம்) என்பதை எழுதும்படி அவர் யோவானுக்கு ஏவுதல் அருளினார். பிற எழுத்தாளர்கள் எழுதிய மற்ற அனைத்து புத்தகங்களையும் அருளினார்.
- உண்மையுள்ளவர்: எதிர்காலத்தைப் பற்றிய அனைத்து ஊககங்களையும் அவருடைய எல்லா வாக்குறுதிகளையும், அவை எத்தனையாயினும், அவர் நிறைவேற்றியுள்ளார்.
- நம்பிக்கைக்குறியவர்: அவர் கடந்தகாலத்தில் செய்ததுபோல எதிர்கால வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றுவார் என்று நாம் அவர் மேல் நம்பிக்கைக்கொள்ளலாம். நாம் அறிந்தவற்றின் சுருக்கம்:

➢ ஆண்டவர் இருக்கிறார், அவர் வாழ்கிறார், அவர் கிரியை செய்கிறார்.
➢ பரிசுத்த வேதாகமம் ஒரு சாதாரணமான புத்தகமல்ல. அது மனிதனுடைய தற்கால, எதிர்கால தேவைகளைச் சந்திக்கக்கூடிய விசேஷமான செய்திகளைக் கொண்ட ஆண்டவர் அருளிய வார்த்தையாகும்.
➢ இயேசுவே வாக்களிக்கப்பட்ட மேசியா, தேவகுமாரன், உலகத்தின் இரட்சகர்.

## 4. வேதாகமத்தின் நோக்கம் என்ன?

- கிறிஸ்து இயேசுவை நம்புவதன் வழி அவருடைய இரட்சிப்பை (நித்திய மரணத்திலிருந்து விடுதலை) ஏற்றுக்கொள்ளும்படி நம்மை ஞானமுள்ளவராக்க.
- 2 தீமோத்தேயு 3:15, "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக.“

அப்படி இயேசு கிறிஸ்துவின் மூலம் நாம் ஆண்டவரின் இரட்சிப்பை ஏற்றுக்கொள்வதற்கே வேதாகமம் உண்டானதானால் நாம் அவரை நமது இரட்சகரும் கர்த்தருமாக ஏற்றுக்கொள்வதே சரியானதாகும்.

"பாவங்களுக்கு மன்னிப்பையும் நித்திய ஜீவனையும் **நான் எப்படி பெற்றுக்கொள்வது? “என்று நீ ஒருவேளை கேட்கலாம்.**

மலும் விவரங்களுக்கு 82603528 என்ற எண்ணில் சூ. சங்கரன் என்பவரைத்
தொடர்புகொள்ளவும். மின் அஞ்சல்:
nedungat@gmail.com
டிச எரசக: www.amazingdiscovery.net

தொடர்ந்து கிறிஸ்துவ வாழ்வில்
வளர்ச்சி அடைய இயேசுவை கனம்பண்ணுவதோடு
வேதாகமத்தைக் கற்றுத்தரக்கூடிய, அருகாமையில் உள்ள
ஒரு சபைக்குத் தொடர்ந்து செல்.